1937

T15ம 211,ந33
N37-4-11
190347.

Registered No. M 3671. APRIL, MAY 1937.




OFFICE OF THE
27 SEP 1937
MADRAS

ரம்பக் கல்வி ஆபீஸ்''

5. புதுத்தெரு மண்ணடி மதராஸ்.

# AIDED SCHOOLS.

## SOME CHANGES.

**The following copy of the Proceedings of the Director of Public Instruction, Madras, will be helpful to all Managers of aided schools.**

These are **INSTRUCTIONS TO INSPECTING OFFICERS**, and they should equally be helpful to Managers of aided schools, who should see that their schools do not suffer, by the application of these changed rules.

As many of the inspecting officers have not correctly understood the scope of the rules confirmed in G. O. No. 174 Education, dated 26th January 1937, the Director issues the following instructions:—

1. The amended rule 1 of the rules framed under section 41 (2) comes into operation on 26-1-37. No school opened after that date without the previous permission of the Deputy Inspector or the Sub-Assistant Inspectors as the case may be, can be granted recognition. The rule is intended to prevent the opening superfluous schools and all cases where recognition is granted contrary to this rule should be brought to the notice of the District Educational Officer or the Inspectress, as the case may be, for suitable action.

2. Rule 6 of the rules under section 41 (2) empowers the Deputy Inspector or the Sub-Assistant Inspectress, as the case may be, to order the bifurcation of a standard. Such a direction can be given only when the attendance in any standard exceeds 35 but it is permissible for a Deputy Inspector to refuse permission to bifurcate when the number of pupils in excess of 35 in any standard is very small or when there are other schools in the neighbourhood to which the excess pupils can be diverted.

3. According to the new rule 1, Chapter I of the rules framed under section 42 (2) grants for teachers working in night or part-time schools can be assessed only at half the rates. This rule comes into force on 31-3-1937. The grant recommendations already made on behalf of any schools for 1937-38 should be modified according to the new rule.

4. All the rules under I—C come into operation on 31-3-1937. In applying rule (1) of these rules inspecting Officers should remember that the minimum average attendance of 20 prescribed as a condition of eligibility for grant is an [illegible]ate minimum and is unweighted. On the other hand, pupils who are below age of 5 and pupils who have remained in the same standard for over two years have also to be included in calculating the minimum attendance. In other words, neither of two provisos (i) and (ii) of rule (2) are applicable for determining the eligibility of a school for aid.

As all the rules under I—C come into operation only on 31-3-37 grants should be calculated according to these rules only after that date. In the case of some schools it is possible that the entire period of 12 months prior to inspection or a large portion of this period may belong to the period prior to 31-3-1937. Schools inspected towards the end of the calendar year will naturally therefore come under the operation of the new rules to a much greater extent than schools inspected earlier in the year. In order to obviate any discrimination it is directed as a special case for 1937—38 that the grants for all schools should be calculated according to the old rules till 31-3-37 and according to the new rules under I—C (2) and (3) from that date to 31-12-1937. This will mean (1) that the figures in regard to assessed grant in respect of schools already inspected and which are likely to be inspected before March 1937 will need to be wholly modified later, (2) that in regard to schools inspected after March 1937 only the assessed grant for the first three months on the calendar year alone. January to March can be fixed, (3) and that in respect of schools the assessed grant from 31-3-1937. to 31-12-1937 will have to be worked on the basis of the monthly returns for April and for the succeeding months including the December return. Similarly for the purpose of rule (I) of I—C the figures from 31-3 37 to 31-12-37 alone should be taken and a school which cannot show a minimum average attendance of 20 for these months should be declared ineligible for aid.

5. Inspecting officers should remember that for calculating the number of teachers for whom grant can be assessed, pupils below 5 and pupils who have remained in the same standard for over two years should be disallowed. On the other hand, proviso (i) to rule (2) allows

Registered No. M. 8671"] வருடச் சந்தா ரூ. 1. [ஏப்ரல், மே 1937.

# ஆரம்பக்கல்வி
## ELEMENTARY EDUCATION

"ஆரம்பக் கல்வி"யின் முன்னேற்றத்திற்காக உழைக்கும் ஓர் மாதாந்திரப் பத்திரிகை.

EDITOR.
P. VEERARAGHAVAN (Member, Madras District Educational Council)

17 SEP 1937 MADRAS

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

# புதிய கல்வி மந்திரி

இத்தனை வருடங்களாக பலவித தியாகங்கள் செய்து கடைசியில் தற்போது மந்திரிப் பதவியை காங்கிரஸ்காரர்கள் ஏற்றதைப்பற்றி நாம் மிகவும் பாராட்டுகின்றோம். அதிலும் நமக்கு பழைய கல்வி மந்திரியாகிய கனம். Dr. சுப்பராயன் அவர்களே மறுபடியும் காங்கிரஸ் கல்வி மந்திரியாக ஏற்படுத்தப்பட்டது, ஆரம்பக் கல்வி அபிவிருத்திக்கே ஒரு நல்ல காலம் ஏற்பட்டதென்றே சொல்ல வேண்டும். ஏனெனில் ஆரம்பாசிரியர்களுக்கு பொதுவாக தற்போதுள்ள பல கஷ்டங்கள் இவர் காலத்தில் கிடையாது இவர் ஆரம்பாசிரியர்கள் சுயேச்சையாகவும், சுகமாகவும், வாழ வேண்டும், இல்லையேல் நமது நாடு முன்னேற்றமடையாது என்ற உண்மையை எளிதில் உணர்ந்தவர். தற்போதுள்ளதைப் போன்ற அனுவசியமான சட்ட திட்டங்களை ஏற்படுத்தமாட்டார். இவர் காலத்தில் கல்விச் சபைகள் அதிக அதிகாரத்தையும், செல்வாக்கையும் பெற்று ஒழுங்காக நடந்துவந்தது. ஸர். ஏ. பி. பாத்ரோ அவர்கள் கல்வி இலாகாவை அடக்கி ஆண்டு வந்ததுபோல் இவரும் கல்வி யிலாகாவை தன் இஷ்டப்படி நடத்திவந்தார். மறுபடியும் இவர் முன்போன்று தைர்யமாகவும், தயவு தாட்சண்யங்களுக்கு உட்படாமல் நமது நாட்டு கல்வி அபிவிருத்தி ஒன்றையே மனதில் நிருத்தி. கல்வி இலாகாவை நடத்திவருவாரென நம்புகின்றோம்.

### அரசாங்கத்தின் புதிய அறிக்கை.

ஸர். கே. வி. ரெட்டி நாயுடு தலைமையின் கீழ் ஏற்படுத்தப்பட்ட இடைக்கால மந்திரிகளின் காலத்தில் அரசாங்கத்தார் கல்வி சீர்திருத்தத்தைப்பற்றி ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர். இதன் சாராம்சம் நமது பத்திரிகையில் பிரசுரித்திருக்கின்றோம். ஆரம்பக் கல்வியை பொருத்தமட்டில் இதைப் பரிசீலனை செய்துப்பார்த்தால் ஆரம்பக் கல்வி அபிவிருத்தியைப்பற்றிய வழி ஒன்றும் கிடையாது, கல்வி இலாகாவை பலப்படுத்தி[illegible] வழிகளைத்தான் குறிப்பிடப்பட்டிருக்கின்றன[illegible] னும் டிப்டி இன்ஸ்பெக்டர்களை அதிகப்[illegible]

வேண்டுமாம்! ஏறக்குறைய ரூ. 1000 மாதச் சம்பளமுள்ள 4 டிவிஷனல் இன்ஸ்பெக்டர்களுடைய உத்தியோகத்தை ஊர்ஜிதப்படுத்த வேண்டுமாம். அதே சமயத்தில் 18629 சிறு பாடசாலைகளை மூடிவிடவேண்டுமாம். பாடசாலைகளை மூடிவிட்டால் கல்வி அதிகாரிகள் அதிகம் எதற்காக என்பது நமக்கு விளங்கவில்லை.

கல்விச் சபைகள் சரியாக வேலைசெய்யவில்லையென்றும், அவைகளை சீர்திருத்தம் செய்யவேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கிறது. அது உண்மைதான். ஸர். ஏ. பி. பாத்ரோ அவர்கள் மந்திரியாக இருந்தவரையில், கல்விச் சபைகளுக்கு சர்வ அதிகாரத்தையும் கொடுத்து கல்விச் சபைகளின் தீர்மானங்களை ஆதரித்து கல்விச் சபைக் கேட்ட பணத்தையும் கொடுத்தார். கனம் டாக்டர் சுப்பராயனும் அவர் காலத்தில், ஆசிரியர்களையும், கல்விச் சபைகளையும், ஆதரித்து நடத்தி வந்தார். அவருக்குப் பிறகு திரு. குமாரசாமி ரெட்டியார் காலத்தில் எல்லாம் தலைகீழாக மாறிற்று, கல்விச் சபைகளின் அதிகாரத்தை எடுத்துவிட்டு அதன் அதிகாரத்தை டைரக்டருக்கு கொடுத்துவிட்டு, டைரக்டர் சிபார்சு செய்யும் பணத்தைத் தவிர, கல்விச் சபைகள் கேட்ட பணத்தைக் கொடுக்கவில்லை. டைரக்டர் தீர்ப்புத்தான் அவருக்கு தெய்வவாக்கு. கல்விச் சபைகளை எய்டட் பாடசாலை மானேஜர்கள் கிராண்டு வாங்கும் பாங்கிகளாக மாற்றிவிட்டார். அதிகாரம் கொடுக்காவிட்டால் எந்தச் சபைதான் ஒழுங்காக வேலை செய்ய முடியும்.

இவைகளையெல்லாம் தற்போதைய கல்வி மந்திரி டாக்டர் சுப்பராயன் அவர்கள் கவனித்து பழையபடி கல்விச் சபைகளுக்கு சர்வ அதிகாரங்களையும் கொடுத்து, காலஞ்சென்ற டாக்டர் சுவாமிநாதன் கூறியதுபோல் கல்விச் சபைகளை அதிகாரிகளின் கண்காணிப்பில் வைக்காமல் அரசாங்கத்தின் கண்காணிப்பில் வைத்துக் கொண்டு, நமது இராஜதானியில் சீக்கிரம் ஆரம்பக் கல்வி [illegible] கும் சட்ட திட்ட [illegible] புகின்றோம், [illegible] இடைக்கால மந்திரிகள் காலத்தில் பிரசாரம் செய்த அரசாங்க அறிக்கையை, ஆசிரியர்களும், ஆசிரிய மானேஜர்களும் சட்டசபை அங்கத்தினர்களும், கலந்த கமிட்டி யொன்றை ஏற்படுத்தி நன்றாக பரிசீலனை செய்யுமாறு புதிய மந்திரியை கேட்டுக்கொள்ளுகிறோம்.

### கல்வி மந்திரி செய்யவேண்டியதென்ன?

நமது இராஜதானியில் சுமார் 50000 ஆரம்பப் பாடசாலைகளிருக்கின்றன. இவ்வளவு பாடசாலைகளிருந்தும் இன்னும் ஆயிரக்கணக்கான சிறு கிராமங்களில் பாடசாலைகளே நிலைநாட்டாமல் இருக்கின்றன. ஜப்பானைப்போல் முதலில் ஒவ்வொரு சிறு கிராமத்திலும், முதல் வகுப்பு பாடசாலையோ, 5-வது வகுப்புப் பாடசாலையோ, ஏற்படச் செய்யவேண்டும். அப்பாடசாலைகளை டிப்டி இன்ஸ்பெக்டர்கள் அடிக்கடி சிறு கிராமங்களில் போய் நடக்கிறதா இல்லையா என்று பார்வையிடுவதற்காக அனுவசியமாக டிப்டி இன்ஸ்பெக்டர்களை ஏற்படுத்தி பொது மக்கள் பணத்தை செலவு செய்வது சரியல்ல. பார்வையிடும் வேலையை கிராம முனிசீப்புக்கும், ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்கும் கொடுத்துவிட்டால் அவர்கள் மாதா மாதம் பாடசாலை நடப்பதும் நடக்காததும் கல்வியதிகாரிகளுக்குத் தெரிவித்து விடுவார்கள். வருடத்திற்கு ஒரு முறையோ இரண்டு முறையோ டிப்டி இன்ஸ்பெக்டர்கள் சென்று பாடசாலையின் திறமையை பரீட்சை செய்து கிராண்டை நிர்ணயிக்கட்டும்.

ஆரம்பப் பாடசாலைகளை கிராமப் பாடசாலைகளெனவும், நகரப் பாடசாலைகளெனவும் இரு வகையாக பிரிக்கப்படவேண்டும். கிராமப் பாடசாலைகளில் 30 அல்லது 40 பிள்ளைகளுக்கு மேல் சேருவது கஷ்டம். ஒன்று இரண்டு உபாத்தியாயர்களுக்குமேல் வைப்பதற்கும் முடியாது. இக்கிராம பாடசாலைகளில் வகுப்புக் கணக்கை எடுத்துவிட்டு, ஒரு பையன் நன்றாக 5-வது வகுப்பு அளவு எழுதவும், படிக்கவும், கணக்குகள் போடவும், அந்த கிராம உபாத்தியாயர் எத்தனை பிள்ளைகளை தயாரிக்கின்றாரோ அத்தனை பிள்ளைகளுக்கும், மாதம் 1 ரூபாய் விகிதம் கணக்கிட்டு (Result Grant) சில வருஷங்களுக்கு முன்பு இருந்தது போல் கிராண்டுகள் கொடுக்கப்படவேண்டும். அவ்விதம் பரீட்சையை, அந்தந்த கிராம முனிசீப்பும், கல்வி யதிகாரியும் சேர்ந்து பரீட்சை செய்வது நலம். கிராமப் பாடசாலைகளில் போதனா முறையில் தேர்ந்த உபாத்தியாயரைத்தான் வைத்துக்கொள்ள வேண்டுமென்ற நிபந்தனையை எடுத்துவிடப்பட வேண்டும். 8-வது வகுப்பு வரையில் படித்த மாணவர்கள் ஆயிரக் கணக்கில் நமது நாட்டில் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள். இவர்களெல்லாம் கிராமாந்திரங்களில் பாடசாலைகளை ஏற்படுத்த உத்சாகப் படுத்தி ரூ. 10 முதல் 15 வரையில் மாதாந்திரம் கிராண்டு கொடுக்க சட்டங்கள் மாற்றப்படவேண்டும், வருடத்திற்கு ஒரு முறை தாலுக்கா விகிதம் இத்தகைய உபாத்தியாயர்களைக் கூட்டி (Refresher Course) டிப்டி இன்ஸ்பெக்டர்களைக் கொண்டு போதனா முறைகளைப்பற்றி போதிக்கும்படிச் செய்யவேண்டும். தற்போதுள்ள போதனாமுறைப் பாடசாலைகளை அடியோடு எடுத்துவிடவேண்டும். இவைகளினால் ஒரு பயனும் கிடையாது. பேருக்குமாத்திரம் போதனா முறை பாடசாலைகளேயொழிய உண்மையில் இங்கு பாடங்கள், நடப்பது பெரிதும் ஆசிரியர்களுக்கு உபயோகமானவைகள் அல்ல. இப்போதனா முறைப் பாடசாலைகள் எடுத்துவிடுவதனால் அநேக லக்ஷம் ரூபாய்கள் அரசாங்கத்திற்கு லாபம் உண்டாகும்.

இத்தகைய முறைகளைக் கைக்கொள்வதினால் தீவிரமாக நமது நாட்டில் ஆரம்பக் கல்வி ஒவ்வொரு கிராமத்திலும் காட்டுத் தீயைப்போல் பரவி குறைந்தது 5 வருடத்தில் ஓரளவு பாமர நோய் சுருங்கிய செலவில் ஒழியும். கல்வி மந்திரி கவனிப்பாராக.

# சென்னை கவர்ன்மெண்டின் புதிய திட்டம்.

கல்வி முறைச் சீர்திருத்தம்

சென்னை கவர்ன்மெண்டார் இப்பொழுது வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தற்கால கல்வி போதனா முறையின் நிலைமையையும் இதில் ஒவ்வொரு பிரிவிலும் நிறைவேற்றப் படக்கூடிய நோக்கங்களையும் அந்நோக்கங்களை காலக்கிரமத்தில் நிறைவேற்றும் முறையையும் எடுத்துரைத்திருக்கின்றனர். இவற்றைப்பற்றிய பொதுஜன அபிப்பிராயம் எதிர்பார்க்கப் படுகிறது.

## திறமையற்ற பள்ளிக்கூடம் கூடாது.

பொதுஜனக் கல்வியைப் பெருக்குவதற்கு இப்பொழுதுள்ள பயனற்ற திறமையற்ற பள்ளிக்கூடங்களை ஒழித்து விட்டு சிக்கனமாகவும் நன்கு நிர்மாணிக்கப்பட்ட ஐந்து வகுப்புப் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தவேண்டுவது மிக அவசியமெனக் கவர்ன்மெண்டார் கருதுகின்றனர். அப்பொழுது தான் ஆரம்பக் கல்வித் துறையில் விசேஷ முன்னேற்ற மேற்படக் கூடும். ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் ஒவ்வொரு வகுப்பிற்கும் பாடமுறை எவ்விதமிருக்க வேண்டுமென்று முடிவு செய்யக் கவர்ன்மெண்டார் சமீபத்தில் ஒரு ஸ்பெஷல் கமிட்டியை நியமித்தனர். ஆரம்பப் பாடசாலை உபாத்தியாயர்களுக்கு போதனாமுறையைப் பற்றி விரிவாகத் தேர்ச்சி வகுப்புகளை நடத்துவதென்றும் உத்தேசிக்கப் பட்டிருக்கிறது. பள்ளிக் கூடங்களை இன்னும் அதிகமாகத் திறமையாக மேற்பார்வையிடவும் இப்பொழுதுள்ள இன்ஸ்பெக்டர்களை அதிகரிக்கவும் உத்தேசிக்கப்படுகிறது. ஆரம்பக் கல்வி டெபுடி டைரக்டர் என்று ஒரு புதிய உத்யோகமேற்படுத்த வேண்டுவதைக் கவர்ன்மெண்டார் சமீபத்தில் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். ஜில்லாக் கல்வி சபைகள் மீது அதிக ஆதிக்கியமிருக்கவும், ஆரம்பக்கல்வி சம்பந்தப்பட்ட வரையில் ஸ்தல

ஸ்தாபனங்களை நன்கு மேற்பார்வையிடவும் நான்கு டிவிஷனல் இன்ஸ்பெக்டர்கள் ஏற்படுத்தப்படுவார்கள்.

### கட்டாய முறையில் மாறுதல்

1934-ம் வருஷத்திய கட்டாய ஆரம்பக் கல்விச் சட்டப்படி ஏற்படும் கட்டாய முறையில் மேற்கொண்டு மாறுதல்கள் உண்டு பண்ணக் கவர்ன்மெண்டார் உத்தேசித்திருக்கின்றனர். கட்டாய முறையை விரிவு படுத்துவதை விட இப்பொழுது சத்தியாக இருக்கும் பள்ளிக் கூடங்களைச் சீர்படுத்துவது அதிக முக்கியமெனக் கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்கின்றனர். கட்டாய மேற்படுத்துமுன் பக்கா பள்ளிக் கூடங்களை ஏற்படுத்துவது மிக அவசியமாகும்.

### உயர்தர ஆரம்பக் கல்வி

உயர்தர ஆரம்பக் கல்வி பற்றி கவர்ன்மெண்டறிக்கை கூறுவதாவது:—இப்பொழுதுள்ள உயர்தர ஆரம்பப் பள்ளிக்கூடங்களைத் திருத்தியமைத்து அவை மத்தியதரப் பள்ளிக்கூடங்கள் போலவே நடத்தப்படுவதை மாற்ற கவர்ன்மெண்டார் உத்தேசித்திருக்கின்றனர். இந்தப் பள்ளிக்கூடங்களுக்கும் மத்தியதரப் பள்ளிச்கூடங்களுக்கும் விரும்பத் தகாத ஒரு போட்டியிருந்து வருவதைத் தடுக்கவிரும்புகின்றனர். ஆங்கிலக் கல்வியின் தன்மையும் வரம்பும் குறைக்கப்படும். தாய்ப்பாஷைக் கல்வி அதிகரிக்கப்படும்.

### உயர்தரக் கல்வியில் சீர்திருத்தம்

நடுத்தர உயர்தரக் கல்விமுறையில் மாறுதல் செய்யவேண்டுவது உடனே அவசியமென்பது கவர்ன்மெண்டு அபிப்பிராயமாகும். மத்தியதரப் பள்ளிக்கூட பொதுக் கல்வி முறையில் மாறுதல் செய்ய வேண்டும். உயர்தரப் பள்ளிக் கூடங்களில் இன்னும் பலதினுசான பாடங்களேற்படுத்தவேண்டும் மத்தியதர வகுப்பு மாணவர்கள் சர்வகலாசாலைப் படிப்புக்குப் போவதில் திட்டமாக வரையறை யேற்படுத்தவேண்டும்.

நான்காவது பாரத்தின் முடிவில் ஒரு பொதுப் பரீக்ஷை வைக்கப்படும். உயர்தர பள்ளிக்கூடப் படிப்பு இன்னும் ஒரு வருஷத்திற்கு நீடிக்கப்படும்.

### இண்டர் மீடியட் வகுப்புகள் ரத்து

சர்வ கலாசாலைகளில் இண்டர் மீடியட் வகுப்புகள் ரத்து செய்யப்படும். சர்வகலாசாலைப்படிப்புக்கு பூர்வாங்கமாக ஹைஸ்கூலில் ஜூனியர் இண்டர்மிடியேட் வகுப்பு சேர்க்கப்படும். மூன்று வருஷ சர்வகலாசாலைப்படிப்பில் முதல் வருஷப்படிப்பாக ஸீனியர் இண்டர்மிடியேட் வகுப்பு சேர்க்கப்படும்.

### நான்காவது பாரத்தில் பாடபேதம்

நான்காவது பாரத்தின் முடிவில் குமாஸ்தா வேலைக்கும் கவர்ன்மெண்டு குமாஸ்தா வேலைகளுக்கும் செல்ல விரும்புவோருக்கும், வியாபாரத்துறையில் வேலைக்குச் செல்ல விரும்புவோருக்கும் அவர்கள் தேவைகளுக் கனுகுணமான பாடபேதங்கள் ஏற்படுத்தப்படும்.

சர்வகலாசாலை படிப்பு யோக்கியதையுள்ளவர்கள் கீழ்த்தர கவர்ன்மெண்டு உத்தியோகங்களுக்கு வருவதைத் தடுக்கவேண்டி சில வகை கவர்ன்மெண்டு உத்தியோகங்களுக்கு வரக்கூடியவர்களுக்கு 18 வயதிற்குமேல் ஆகக்கூடாதெனக் கவர்ன்மெண்டார் ஒரு விதி யேற்படுத்துவதாக உத்தேசிக்கின்றனர். இந்த யோசனைகளை நிறைவேற்றுவதில் இம்மாகாண சர்வகலாசாலைகள் கவர்ன்மெண்டுடன் ஒத்துழைக்கவேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இந்த யோசனைகளைப்பற்றி கவர்ன்மெண்டார் பொதுஜன அபிப்பிராயமறிய விரும்புகின்றனர்.

---

# Untrained Teachers of the Lower Elementary Grade.

G. O. No. Ms. 1150.

Dated the 28th May 1937.

ORDER, Under rule 4 (5) of the rules framed under Section 41 (2) of the Madras Elementary Education Act, 1920, a District Educational Council can in consultation with the District Educational Officer or the Inspectress of Girls' Schools as the case may require, exempt any named headmaster of, or teacher in, an elementary school under private management from the qualifications prescribed for such headmaster or teacher. Rule 4-A newly introduced in chapter I of the rules under Section 42 (2) of the Act says that in the case of schools employing only one teacher or two teachers the teacher or both the teachers, as the case may be, shall be trained teachers and that schools employing more than two teachers may employ one untrained teacher for every two trained teachers. New rule 1-D in the same chapter says that no grant shall be assessed for untrained teachers employed in excess of the maximum prescribed by rule 4-A and that the rule shall apply in respect of institutions existing on 1-st December 1936 with effect on and from the 1st January 1939.

2. The question has been raised as to whether teaching grant may be paid as at present on behalf of untrained teachers of the lower elementary grade exempted by District Educational Councils or whether those teachers should be eliminated altogether from the teaching profession. The policy of Government as set out in the Press Communique of 8th December 1936 gradually to reduce the number of untrained teachers of the elementary grade and discourage the further training of teachers of the lower elementary grade. Presidents of District Educational Councils are informed that teaching grante may continue to be paid on behalf of untrained teachers of the lower elementary grade subject to the condition that the previsions of rule 4-A referred to above are observed. The exemption already granted to this class of teachers should not be regarded as permenent. but should be re-examined, if necessary.


ஆப்த நண்பன்

நீங்கள் அறியாமையினால் தேக சுகத்தைக் கெடுத்துக் கொண்டு அல்லல்படும் சமயத்தில் உங்களுக்கு ஆப்த நண்பனாக உதவும் எங்களுடைய உலகப் பிரசித்தி பெற்ற

ஆதங்க நிக்ரஹ மாத்திரை

களை உபயோகித்தீர்களா? இல்லையேல் உபயோகித்து உடனே தேக அசதி, மலச்சிக்கல் நரம்புகளின் தளர்ச்சி, பசியின்மை, ஞாபக குறைவு, தாது புஷ்டியின்மைமுதலிய வியாதிகளை நிவர்த்தி செய்துக் கொள்ளுங்கள். 32 மாத்திரைகள் அடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1-0-0

இனாம்! காம சாஸ்திரம் இனாம்!!

விலாசத்தை தெரிவியுங்கள்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

26, பிராட்வே, : : : : மதராஸ்.

# சென்னைச் சட்டசபைகள்

## இராஜாங்க சபை

தலைவர்:

டாக்டர் - யு. ராமராவ்

உதவித் தலைவர்:

திரு. கே. வெங்கடசாமி நாயுடு

## ஜனப் பிரதிநிதி சபை

தலைவர்:

திரு. புலுசு - சாம்பமூர்த்தி

உதவித் தலைவர்:

ஸ்ரீமதி ருக்குமணி லக்ஷ்மீபதி அம்மையார்

## சென்னை மந்திரி சபை

சென்னை மந்திரிகளின் பெயர்களும், அவர்கள் ஏற்றுக்கொண்ட இலாகாக்களும், அவர்கள் காரியதரிசிகளின் பெயர்களும் வருமாறு:—

| | இலாகா | காரியதரிசி |
|---|---|---|
| 1. கனம் ஸி. ராஜகோபாலாச்சாரியார் (பிரதம மந்திரி) | உள்நாடு, நிதி | ஏ. காளேஸ்வர ராவ் |
| 2. டி. பிரகாசம் | ரெவின்யூ | டி. விஸ்வநாதன் |
| 3. டாக்டர் சுப்பராயன் | சட்டம், கல்வி | ஸி. ஜே. வர்க்கி |
| 4. வி. வி. கிரி | தொழில், தொழிற்சாலை | பி. சூர்யநாராயண மூர்த்தி |
| 5. வி. ஐ. முனிசாமி பிள்ளை | அபிவிருத்தி-விவசாயம் | என். எஸ். வரதாச்சாரியார் |
| 6. யாகூப் ஹஸன் | மராமத்து | கே. ஆர். காரந்த் |
| 7. எஸ். ராமநாதன் | விளம்பரம் | எம். பாபிரெட்டி |
| 8. கே. ராமன் மேனன் | கோர்ட்டுகள், ஜெயில் | ஏ. கே. மொகிதீன் மரக்காயர் |
| 9. பி. கோபால் ரெட்டி | ஸ்தல ஸ்தாபனம் | எம். பக்தவத்சலம் |
| 10. டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் | சுகாதாரம் | ஏ. பி. ஷெட்டி |


# Monthly Return Appendix 33.

புதிய ஆரம்பக் கல்விச் சட்டத்திருத்தத்தின் 5-வது பிரிவின்படி பிரதி மாதமும் ஒவ்வொரு பாடசாலையும் மாதாந்திர ரிபோர்ட்டு 15-ந் தேதிக்குள் டிப்டி இன்ஸ்பெக்டர்களுக்கு அனுப்ப வேண்டும். பிரதி மாதமும் எழுதியனுப்ப சிரமம் இல்லாமல், ஆங்கிலத்திலும், தமிழிலும் கலந்த பாரங்கள் (Monthly return Forms) அச்சிடப்பட்டிருக்கின்றன. 4 அணா தபால் பில்லைகளை (Postal Stams) காலணா பில்லைகளாக அனுப்பினால் 24 பாரங்களும் உடனே தபாலில் அனுப்பிக்கப்படும்.

மானேஜர்

"ஆரம்பக் கல்வி ஆபீஸ்"

94-95, புதுத்தெரு மண்டி, மதுரை.


# கலம்பகம்.

### புகைத் தந்தி

விஷயங்கள் மட்டும் தந்திகள் மூலம் வெளியூர்களுக்கு அனுப்பக் கூடும் என்று எண்ணுதல் வேண்டாம். படங்களையும் வெளியூர்களுக்குத் தந்திமூலம் அனுப்பலாம். இதுவரையில் படங்கள் ரேடியோ மூலம் அனுப்பப்பட்டு வந்தன. இப்போது சாதாரண தந்திகள் மூலமும் படங்களை அனுப்பும் கருவிகளும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

* * *

### பாலிலிருந்து பட்டு

ஜெர்மெனியைச் சேர்ந்த திரு. வொன் ஜாமீன் நூஸ் என்பவர் இங்கிலாந்தில் தங்கியிருக்கிறார். அவர் சென்ற பத்து வருஷங்களாகப் பாலிலிருந்து பட்டு செய்யும் முறையைக் கண்டு பிடிக்கப்பாடுபட்டு வருகிறார்; முயற்சியில் வெற்றியும் பெற்று விட்டார். தாம் பாலிலிருந்து செய்தபட்டைப் பரிசோதிக்கும் பர்லின் நகரத்துக்கு அனுப்பினார். இயற்கைப் பட்டுக்கும் வித்தியாசம் கண்டுபிடிக்க முடியவில்லையென்று பால் ஆராய்ச்சியாளர் கூறிவிட்டார்.

முசக்கட்டை இலைகளையே ஆகாரமாகக் கொள்ளும் பசுவின் பாலிலிருந்தே இப்போது பட்டு நூல் செய்யப்படுகிறது. பசுவின் பாலைக் காய்ச்சி வெண்ணெய் எடுத்த பிறகு நிற்கும் பாலிலுள்ள 'காஸெய்ன்' என்ற பொருளை பட்டைத்தர வல்லது. தினசரி ஒரு பசுவின் பாலைக்கொண்டு இரண்டரை பவுண்டு எடையுள்ள பட்டு எடுக்கலாம். இவ்வளவு நூலுக்கு முப்பதாயிரம் பட்டுப்பூச்சிகளைக் கொல்ல வேண்டியிருக்கிறது. கொலையைவிடப் பாலிலிருந்து பட்டு எடுப்பது மேலல்லவா?

* * *

### எறி நக்ஷத்திரமாவது என்ன?

நாம் சில இராக்காலங்களில் ஒரு நக்ஷத்திரம் மிக்க பிரகாசத்தோடு ஓரிடத்திலிருந்து ஆகாயத்தில் மற்றோரிடத்துக்கு அதிக வேகமாகப் போவதைக் காண்கிறோம். அது நக்ஷத்திரமா? அன்று. அஃது எறி நக்ஷத்திரமென்று அழைக்கப்படுகிறது. அது பற்றிய ஆராய்ச்சி இப்போது அதிகமாக நடந்துகொண்டிருக்கிறது. ஆகாயத்தில் சில கற்பாறைகள் இருக்கின்றன. அவை ஆகாய வெளியில் இங்கும் அங்குமாகச் சஞ்சரித்துக்கொண்டிருக்கின்றன. அப்படிச் சஞ்சரிக்கும் சமயத்தில் பூமி பக்கமாக வரும்போது பூமியின் ஆகர்ஷணசக்தி அதிகமாக அவை பூமி நோக்கி இழுக்கப்படுகின்றன. அதனால் அப்பாறைகள் பூமியில் விழுகின்றன. விழும்போது பிரகாசம் தோன்றுவானேன்? இந்தியா ரப்பரை ஒரு கம்பளத்தின்மீது தேய்த்தால் சூடு உண்டாகிறது. எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகத் தேய்க்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு சூடு உண்டாகும். அது போல் ஆகாயத்தில் இக்கற்பாறைகள் ஆகர்ஷண சக்தியால் இழுக்கப்பட்டு வேகமாக ஓடும்போது ஆகாயத்தில் மற்றப்பொருள்களோடு தேய்கின்றன. அதனால் ஒன்றோடொன்று தேய்வு உண்டாகின்றது.

அந்தேய்வின் பயனாக உஷ்ணம் உண்டாகின்றது. உஷ்ணம் அதிகமாக நெருப்பு உண்டாகிறது. நெருப்பால் பிரகாசம் உண்டாகிறது. எனவே அப்பாறைகள் பிரகாசத்தோடு பூமியில் வீழ்கின்றன. இதுபோன்ற பாறைகள் சில பொருட்காட்சிச் சாலைகளிலும் வைக்கப்படுகின்றன.

* * *

### உலகத்தில் அழகான வாயில்

மொகலாயச் சக்கரவர்த்திகளுக்குத் தலைநகராக இருந்ததும் டில்லியே. டில்லி பல அரசர்கள் காலத்தில் பல பெயர்களால் அழைக்கப்பட்டது. மகா பாரதத்தில் அஃது அஸ்தினாபுரம் என்று அழைக்கப்பட்டிருக்கிறது. அங்குள்ள அரண்மனையின் வாயிலே உலகத்தில் அழகான வாயில் என்று கூறப்படுகிறது. அஃது அக்பரால் கட்டப்பட்டது. அக்பர் அதிகம் படியாதவர். ஆயினும் கேள்வி வாயிலாக அவர் பல உண்மைகளைக் கற்றார். அவரிடத்தில் மதத்துவேஷம் கிடையாது. எல்லா மதமும் ஒரே கடவுளைப்பற்றிக் கூறுகின்றன வென்பதே அவரது அபிப்பிராயம். அவர் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவராயினும் கிறிஸ்தவ மதத்திலும் அன்பு கொண்டிருந்தார். இதை விளக்கவே அவ்வாயிலின் தலைப்பில் "இயேசு நாதர் சாந்தி அடைவாராக" என்று எழுதப்பட்டிருக்கிறது.

# முஸோலியின் வாழ்க்கை.

பிராணி சாஸ்திர முறைப்படி வாழ்வதனால் முஸோலினி வலுவாயிருக்கிறார்.—

"என் அங்கத்திலிருந்து ஒரு எஞ்சின் தயார் செய்திருக்கிறேன். அதை சதா மேற்பார்வை செய்துகொண்டும், அடக்கி யாண்டுகொண்டும் இருப்பதால், அது மிக்க ஒழுங்காய் ஓடுகின்றது". இம்மாதிரி, தான் எவ்வாறு தன் தேகத்தைப் பாதுகாக்கிறார் என்பதை முஸோலினி விவரித்துச் சொல்லுகிறார். அவருடைய ராஜ தந்திர கொள்கைகளைக்குறித்து ஒருவர் எவ்விதம் நினைத்தபோதிலும், அவருக்கு சக்தியுண்டென்றும், அநேக பெருத்த விஷயங்களை அவர் முடித்திருக்கிறார் என்பதையும் ஒப்புக்கொள்ளவேண்டும். இராஜாங்கத்தின் சிவில், மிலிடேரி முதலிய எல்லா வியவகாரங்களும் அவர் மூலமாகத்தான்போகிறது. ஹிட்லரைப் போலன்றி, தனக்காகப் பேசும்படி பிரதிநிதிகளை நியமிக்கிறதில்லை; அல்லது விசேஷமான ராஜவிவகாரங்களைக் கவனிக்க உத்தியோகஸ்தர்களை நியமிக்கிறதில்லை. தினம் 12 முதல் 14 மணி காலம் வேலை செய்கிறார். அப்படிச் செய்தும் வலுவாகவே இருந்து கொண்டிருக்கிறார்.

யுனைடெட் பிரஸைச்சேர்ந்த வெப் மில்லர் என்பவர், இல் ட்யூஸின் (முஸோலினியின்) ஆரோக்கியப் பழக்க வழக்கங்களைக் குறித்து அவரிடம் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தார். அப்போது மஸோலனி தான் சாகபக்ஷணி என்று உறுதியாய்ச் சொன்னார். சாராயம், ஒவ்வொரு நபரின் ஆரோக்கியத்திற்கும், கெடுதலானது என்பது அவருடைய அபிப்பிராயம். இறக்கின சாராயங்களை அவர் குடிக்கிறதேயில்லை. இராஜாங்க விருந்துகளின் போது கொஞ்சம் திராக்ஷாஸம் எடுத்துக் கொள்வார். பூலோக யுத்தத்திற்குப் பிறகு சுருட்டுப் பிடித்ததே கிடையாது. குடியானவர்கள் உண்ணும்படியான ஸ்வல்ப ஆகாரமும், அதிகமாகப் பழமும் அவர் சாப்பிடுவார். காபி, டீயில இவைகளைத் தொடுகிறதேயில்லை.

தினம் 30 நிமிஷம் முதல், 45 நிமிஷம் வரையில் வியாயாமம் எடுத்துக்கொள்வார். அநேக வித விளையாட்டுக்களில் அவருக்குப் பிரியம். கோடை காலத்தில் நீந்துதலும், குளிர்காலத்தில் ஸ்கையிங்கும், தினம் குதிரை சவாரியும் அவருக்கு இஷ்டம் அவர் நடப்பார், தாண்டுவார்; பைஸிகில், மோட்டார் ஸைகில், மோட்டார் விடுதல், படித்தல் முதலியனவற்றில் இவருக்குப் பழக்கம் அதிகம்.

பகலில் என்ன விசேஷம் நடந்தபோதிலும், படுக்கப்போனதும் உடனே உறங்கிவிடுவார். தினம் கிரமமாய் 11-மணிக்கு படுத்துக்கொண்டு, காலையில் ஏழுமணிக்கு எழுந்துவிடுவார்: பகலில் அவர் உறங்குகிறதில்லை. அவருடைய பேட்டி காலை 8 மணிக்கு ஆரம்பித்து, பகல் ஒருமணிக்கு முடியும். பிறகு 3-மணிக்கு ஆரம்பமாகி, இரவு 8 மணிக்கு முடிந்துவிடும். ஒரு வருஷத்தில் பிரெஞ்சு, ஜெர்மன், இங்கிலீஷ் இப்பாஷைகளில் 70 புத்தகங்கள் படிப்பதற்கு அவருக்கு நேரம் இருக்கும். அவர் படிக்கும் புத்தகங்கள் முக்கியமாய் சரித்திரமும், இராஜதந்திர விஷயங்களும், எப்போதாகிலும் நாடகம் பார்க்கப்போவார். அவர் தொழில் மிகவும் ஒழுங்கானது. 1925-ம் வருஷமுதற்கொண்டு முஸோலினி அசௌக்கியமாயிருந்ததேயில்லை. இப்போது அவருக்கு 55 வயது ஆகப்போகிறது.

அநேகர் தங்களுக்கு அதிக வேலை இருக்கிறதென்றும், அதனால் வியாயாமம் எடுத்துக் கொள்ளவும், தங்கள் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் போதுமான அவகாசம் இருக்கிறதில்லையென்று சொல்கிறார்கள். ஆனால், இந்த இத்தாலியா டிக்டேடருடைய பொறுப்பைப்போல் ஒருவருக்கும் கிடையாது. இதே மாதிரியாக, ஹிட்லரும் தன் தேகத்தைப் பாதுகாத்துக் கொள்வதில் அதிக சிரத்தையுள்ளவர். அவர் மாமிசம் சாப்பிடுகிறதில்லை, சுருட்டு பிடிக்கிறதில்லை, எந்தவிதமான சாராயமும் குடிக்கிறதில்லை.—

குட் ஹெல்த், (அமெரிக்கா).

# ஆரம்ப ஆசிரியர்களின் பரிதாப நிலை

நமது நிலைமை.

'சுதந்திரம் நமது பிறப்புரிமை' என்பதையுணர்ந்த பின்னர் 'உயிரைக் கொடுத்தாயினும் உரிமையைப் போற்றுவோம்' என்னும் உணர்ச்சி மீதூர சுதந்தரப்போராட்டங்களும் அரசியல் சீர்திருத்தம் ஒருபால், சமூகச் சீர்திருத்தம் ஒருபால், ஆலயப் பிரவேசம் ஒருபால், பாஷாபிவிருத்திஒருபால், ஆகிய இன்னோரன்ன பற்பல நல்லறக்கிளர்ச்சிகள் தோன்றி மக்களின் ஆதரவைப்பெற்று நடைபெறுகின்றன. இவை யனைத்தும் பூர்ண வெற்றி பெறுவான் வேண்டி அவற்றிற் கடிப்படையாயுள்ள கல்வித் துறையில், அஃதும் ஆரம்பக்கல்வியில் மறுமலர்ச்சியான துபெரிதும் புத்துணர்ச்சி பெருதது நமது துர்ப்பாக்கியமாகும். நந்தாயகம் யாங்கணும், குறிப்பாக நமது சென்னை மாகாணத்திலும் ஆரம்பக் கல்வி மிகவும் பயனளிக்கத் தக்க முறையில் அபிவிருத்தியடையவில்லை யென்பதை யாரே மறுக்கவல்லார். சமீபத்தில் தஞ்சையில் நடைபெற்ற ஜில்லா ஆசிரியர் கல்வி மகாநாட்டில் தலைமைவகித்த தென்னிந்திய சர்வ கலா சாலைகளின் ஏகப் பிரதிநிதியான திரு. இராஜாஜி அவர்களும் இதை வற்புறுத்தி வருங்கால மக்களாகிய மாணவ மாணவிகள், தமது வாழ்விற்குகந்த தன்னம்பிக்கையுள்ள வாழ்க்கை நடாத்தவும், சுதந்திரர்களாய்த் திகழவும் இன்றியமையாத தொழின் முறைகளைப் போதித்து, தினசரி வாழ்க்கையில் வெற்றிபெறச் செய்வது ஆசிரியர் செயற்பாலதாகிய அரும்பணியாகும் எனக் கூறியது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். இத்துணை, நாம் அனைவரும் ஆரம்பக் கல்வியில் நாட்டஞ் செலுத்தாது அலட்சியம் செய்ததனாலன்றோ, நம் நாடு வறுமைவாய்ப்பட்டு வாடி வதங்குவதுடன் நில்லாது, சாதிப்பூசல், சமூகக் கொடுமை முதலிய அல்லல்களுக்கும் ஆளாகி அரசியல் அடிமைகளாகவும் உழல்கின்றோம். மேலும் தற்போதைய நிலையில் கல்வி கற்கப்புகும் ஒருவரும் உயர்தரக் கல்வியை நாடி, உள்ளபொருளையுமிழந்து உலக வாழ்வை நடாத்த உதவியின்றி வகை யறியாது திகைத்து ஊசலாடுகிறார். இந்நிலையில் நாடு சீர்கேடடைவது வியப்பன்று.

கல்வியின் நிலைமை.

எனவே முதலாவதாக இக்கல்வி முறையையே அடியோடு திருத்திச் செப்பனிட்டுப் பாலர்களின் அறிவு வளர்ச்சிக்கேற்ற முறையில், அன்னாரின் வாணாளில் கைக்கொள்ளவேண்டிய கருமங்கட் கிசைந்த விதத்தில், நம்நாடு பிற நாட்டை எந்தத் துறையிலும் எதிர்பாராது தன்னையே போஷித்துக் கொள்ளும் வண்ணம் அமைக்கப்படல் வேண்டும். கற்றோர் அனைவரும் பெரிதும் பயனற்ற பட்டதாரிகளாவதும், பேனாவைக் கொண்டு தான் பிழைக்க வேண்டும் என்றுள்ள வெட்கக் கேடான நிலைமைமாறி, தேசாபிவிருத்திக்கும், பொருளாதார அபிவிருத்திக்கும் ஏற்ற வண்ணம் இளமையிலேயே பழகச் செய்யவேண்டியது இன்றியமையாததாகும். இத் துறையைக் கூர்ந்து நோக்குழி இதில் நேர்முகமாக ஈடுபட்ட ஆரம்பாசிரியரனைவருக்கும் இலக்கிய இலக்கணப் போதனைப் பயிற்சியேயன்றி பிற பிரயோசனம் தரத்தக்க பயிற்சியே இல்லையென்றியம்பலாம். அன்னார் தம்பால் பயிலும் பாலகருக்கு எழுத்தறிவிப்பரே யன்றி அவற்றாலாய பயனையடையும் மார்க்கத்தை உணர்த்த வல்லாரல்லர். எனவே கல்விகற்ற மாணவர்கள் பாடசாலைகளை விட்டு எட்டாம் வகுப்பிலோ, அன்றி, பத்தாம் வகுப்பிலோ வெளியேறுங் காலையில் காட்டிடை விடப்பட்ட கபோதிகளேபோல் கையற்ற நிலையில் யாங்கணும் இயற்கை வாழ்வுடன் போராடவேண்டியிருக்கிறது. எத்துணை மாணவர் வாழ்க்கையில் பிரவர்த்திக்க முடியாமலும், உண்ண உணவும் தேடச் சக்தியற்றும் தவிக்கின்றார்களென்பது இறைவனுக்கே வெளிச்சம்.

ஆசிரியர் நிலைமை

இரண்டாவதாக, ஆசிரியர்களின் [illegible] ஆராயப்புகின் பெரும்பான்மையரான [illegible] சிரியர்கள் போதிய உலகானுபவ[illegible]

பும் அடையாத ஆரம்ப காலத்திலேயே அத்தொழிலில் ஈடுபடுகின்றார்கள். தாம் ஈடுபட்ட கருமத்தின் மேன்மையையும், அஃதோடியைந்த தவற்றின் பொறுப்பையும் உணராத எவரும் எடுத்த கருமத்தில் வெற்றி பெறுதல் இயலாது. உதாரணமாகத் திரவிய சகாய பாடசாலைகளை ஆராயப்புகின், ஆண்டு ஆசிரியத் தொழிலுரிமை பூண்ட பெரும்பாலோர் ஏறக்குறைய இருபது வயதுக்குட்பட்டவர்களின் எண்ணிக்கைக்குக் குறைவேயில்லை. ஏற்றுக்கெனின் அன்னோரன்னர் 14, 15 வயதில் எட்டாம் வகுப்புப் பரீட்சை பெறுகின்றனர். பின்னர் வேலையில்லாத் திண்டாட்டம் எதிர்ப்பட 16, 17 வயதில் போதனாமுறைபயின்றோ, பயிலாமலோ ஆசிரியராகின்றனர். போதனாமுறை பயிலாதார்க்கு அரசாங்கத்தோடியைந்த பாடசாலைகளில் இடமில்லை; எனவே, திரவிய சகாயபாடசாலைகள் மட்டுமே திறந்துவைக்கப்பட்டிருக்கின்றன. அத்திரவிய சகாய பாடசாலைகளிலோ வெனின் மானேஜர்கள் தாம் பெறும் திரவியசகாயத்தையே ஆசிரியர்களின் சம்பளமாக நிர்ணயித்து, அல்லது அதில் ஒரு பகுதியைத் தமக்கு ஊதியமாகக் கொண்டு எஞ்சியதை இவ்விளம் ஆசிரியர்களுக்கு கூலியாகக் கொடுத்து அமர்த்திக்கொள்கின்றார்கள். அவ்விளம் ஆசிரியர்களும் இதற்கிசைய வேண்டியிருக்கின்றனர். எவ்வாறெனின் அன்னார் போதனாமுறைப்பயிற்சி பெறகுறைந்தது ஓராண்டாவது ஆசிரியத்தொழில் நடாத்தியிருக்க வேண்டும் எனும் அரசாங்கச் சட்டமே நிர்ப்பந்திக்கிறது. இம்மட்டோ வெனின் போதனா முறைபயின்றோரின் எண்ணிக்ணிக்கையும் நாளுக்கு நாள் தேவைக்கு மிஞ்சி விருத்தியாகவே, அவர்களில் ஒரு சிலரே அரசாங்கம் ஸ்தலஸ்தாபனம் முதலியவற்றின் ஆதிக்கத்தின் கீழுள்ள பாடசாலைகளில் இடம்பெற முடிகிறது. மிதிமிகுந்தோரும், அதுவும் அற்று வாய்ச் சொல்லால் 'சிபார்சு' பெற்றவருமே அங்ஙனம் இடம் பெறுகின்றனர். அவ்விரண்டும் அற்றவர் தம்முளே போட்டியதிகரிக்கத் திரவிய சகாய பாடசாலை நிர்வாகத்தினர் காலியாயுள்ள ஆசிரியர் ஸ்தானங்களை மட்டுமின்றி, நியாயமான சம்பளம் பெற்றுவரும் ஆசிரியர்களின் ஸ்தானங்களையும் ஆண்டுதோறும் ஏலம் போட்டு, குறைந்த சம்பளத்திற்கு ஒப்புக்கொள்ளும் ஆசிரியர்களை நியமித்துக் கொள்ளுகின்றனர். இதனால் ஆசிரியர்களின் சம்பளம் குறைபடுவதொரு புறமிருக்க ஆண்டுதோறும் ஆசிரியர்கள் மாறுபடுவது மட்டுமின்றி, அன்னார் ஊக்கமும் உழைப்பும் குன்றுகின்றன. இஃதும் இறைத்திருவிளையாடல் போலும்.

### சம்பளம்.

அந்நிலைமையைத் தவிர்க்கொணாத ஆசிரியர்களாயினும் தமது சம்பளத்தை மாதந்தோறும் பெறுகின்றாருமில்லை. அன்றி மாதம் கொஞ்சம் உயிர்வாழ்வதற்கவசியமான பொருள்பெற்றமிகுதியை ஆண்டினிறுதியிலும், பலர் ஆண்டு முழுவதும் வருந்தி யுழைத்த உழைப்பின் பலனை அடுத்த ஆண்டின் இறுதியிலும் எதிர்பார்க்கும் இழிதகைய நிலையிலிருக்கின்றனர். இந்நிலையில், தினசரி வாழ்விற்கும் திகைக்கும் நிலையில் மனோசாந்தியின்றிப் போதிப்பது எதிர்பார்க்கத்தக்கதன்று. சாந்தியின்றி எக்கருமமும் சாதிக்கவொண்ணாதன்றோ. மனோசாந்தி இன்றேல் மறுமலர்ச்சி இன்றாம். எனவே இவ்வாசிரியர்கள் அறுதினமும் வாழ்க்கைப் போராட்டத்தினிடையே பாடசாலையில் தம் வயம் ஒப்புவிக்கப்பட்ட பாலர்களைத் தேர்ச்சிபெறச் செய்வது முயற்கொம்பாகின்றது. வயிற்றில் பசியும் வாயில் போதனையும் கொண்டுள்ள ஆசிரியர்களிடம் மாணவர்களின் மனோ விருத்திக்கு எத்துணை இயைந்திருக்கும் என்பதை உய்த்துணர்க. எனவே இத்தியாதி காரணங்களினால் இம்முறை மாறி ஆசிரியரின் வாழ்க்கை—குறிப்பாக திரவிய சகாய பாடசாலை ஆசிரியர்களின் வாழ்க்கை—இனிது நடக்கும் நன்னாளே ஆரம்பக் கல்வியும் மறுமலர்ச்சியடைந்து சுதந்திர சூரியன் உதயமாவான் என்பதில் எட்டுணையும் ஐயமின்று.

### வயது.

இஃதொரு பக்கல் இருக்க, ஆரம்ப ஆசிரியர்களின் வயதும் நிர்ணயிக்கப்படவேண்டியது அத்யாவசிய மாகின்றது. பொறுப்பின் முழு



அமிசத்தையும், ஆரம்பக் கல்வியின் பூர்ண நோக்கத்தையும், பாலர்களின் மனோபாவத்தையும் சற்றும் உணரமுடியாத நிலையிலுள்ள சுமார் 20 வயதுக்குட்பட்ட பால ஆசிரியர்கள் தாம் சிறுவர்களிடம் அத்துணை பொறுப்புணர்ந்து போதிப்பாரா வென்பதை ஆராய்ந்து அதற்கான செய்தல் அறிஞர் கடனாகும்.

மேலே கூறிப் போந்த திரவிய சகாய பாடசாலை ஆசிரியர்கள் தற்போதுள்ள நிலையில் அரசாங்கத்தினின்றும் பாடசாலை மானேஜர்களிடமிருந்தும் தக்க பலனை எதிர்பார்க்க வேண்டுமாயின் அவர்கள் தங்களுக்குள்ளேயே பிற தொழிலாளர் பதவியினர்களுக்கிடையே அமைந்துள்ள சங்கங்கள் போன்று 'திரவிய சகாய பாடசாலை ஆசிரியர்களின் சங்கங்கள்' தாலுக்காக்கள் தோறும் நிறுவிக் குறைகளுக்கான அறநெறியில் பெரிதும் முயன்று நடத்தல்வேண்டும்.

### வேண்டுகோள்.

இவை யனைத்தையும் தொகுத்துக் கூறுமிடத்து ஆரம்பக்கல்வி அபிவிருத்தியடைந்து சமூகம் அதனாலாய பயனைப்பெற விழையின் ஆரம்பக் கல்வி முறை வாழ்க்கைக்கேற்ற விதமாக மாற்றியமைக்கப்பட்டு, ஆரம்பாசிரியர்களின் போதனாமுறையும் சீர்திருத்தப்பட்டு, அதனோடு அன்னார் தம் பொறுப்பையும் உணரச்செய்தல் வேண்டும். ஆசிரியர்களின் சம்பளமுறையையும், முக்கியமாக திரவிய சகாய பாடசாலை ஆசிரியர்களின் நிலைமையையும் நன்கு அமைக்க வேண்டும். இவையனைத்தும் ஆராய்ந்து ஆவன செய்ய அறிஞர்கள் முன் வருவார்களாக. ஆரம்ப ஆசிரியர்களே! நீவிர் விழிமின்; எழுமின்; கருதியகருமம் கைகூடும் வரை உழைமின்.

# ஆரம்பக் கல்வி

### 1. ஆரம்பக் கல்வியின் போக்கு.

நமது நாட்டில் பண்டைய காலத்தில் ஆரம்ப பாடசாலைகள் எழுதப் படிக்கவும், கணக்குப் போடவும், நீதி மார்க்கத்தைத் தழுவவும் போதித்து வந்தன. இப் பாடசாலைகள் கிராம சமூகத்தில் கிராமவாசிகளுக்காக ஏற்பட்டன. மத்திய காலத்தில் கோயில்களிலும், மசூதிகளிலும், கிராமச் சாவடிகளிலும், பெரிய நிலச்சுவான்தார் வீடுகளிலும் ஏனைய படிப்பைப் பள்ளிகள் கூட்டி வந்தன. ஆங்கில ஆட்சியில் கிருஸ்தவ குருமார்கள் பள்ளிகள் ஸ்தாபிக்க ஆரம்பித்தனர். இதுவரையில் படிப்பு லௌகிக வாழ்க்கையை ஒட்டி வந்தது. கிருஸ்தவர்கள் மதப் படிப்பையும் பள்ளிக்கூடங்களில் புகுத்தலாயினர். ஆசிரியர் கிராமத்தில் சிறந்த ஓர் வாசியாக இருந்துவந்தார். பொதுமக்கள் ஆதரவைப் பெற்றிருந்த பள்ளிகள் பிரிட்டிஷ் ஆட்சியில் சர்க்கார் அங்கீகாரமும் உதவியும் பெற்று மேன்மையடைய விரும்பின.

### 2. துரைத்தன நடவடிக்கை.

1835-ல் சம்பளம் போக பாக்கிப் பணச்செலவு பொறுப்பை ஏற்றுக்கொள்ள திட்டம் துரைத்தனத்தார் ஏற்பாடு செய்தனர். ஆனால் இக்கொள்கை சீக்கிரம் கைவிடப்பட்டது. சர்க்கார் உதவி மான்யக்கொள்கையை அனுஷ்டிக்கலாயினர். இக்கொள்கையும் மறுபடி மாற்றப்பட்டது. உதவி மான்யம் குறைக்கப்பட்டது. முதலில் பரீக்ஷை தேரிய கணக்கின்மீது உதவியளிக்கப்பட்டது. அதன் பின்னர் கல்வி இலாகா கண் காணிப்பாளர் பரீக்ஷையின்மீது உதவி மான்யம் சிபார்சு செய்யப்பட்டது. ஆசிரியருக்கு இப்படி ஜீவனாம்சம் அளிக்கப்படும் கொள்கையும் தற்போது மாற்றப்பட்டு வருகிறது. இனித் திறமைப் பள்ளிகளுக்கே உதவியளிக்கப்படும் என்ற கொள்கை உருவாகி வருகிறது.

### 3. தேச மனப்பான்மை.

கல்வி விஸ்தரிப்பு அவசியம் என அறிஞர்

முயல ஆரம்பித்தனர். இலவசக் கட்டாயக் கல்வி வேண்டுமெனக் காலஞ்சென்ற கோபால கிருஷ்ண கோகலே நினைவுகொண்டார்; சட்ட சபைகளில் மசோதா கொண்டுவந்தார். இன்னும் கோகலேயின் நினைவு கனவாகவே இருந்து வருகின்றது.

4. இரட்டையாட்சியில் கல்வி.

தேச மனப்பான்மையை அறிந்து நிறைவேற்ற இரட்டையாட்சியில் 1919-ம் வருஷத்தில் முதல் சந்தர்ப்பம் வாய்த்தது. இந்தியர் கல்வி மந்திரிகளாக அமர்ந்தனர். கல்வி விஸ்தரிப்பு திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. கட்டாயக் கல்வியும் இலவசக் கல்வியும் பரவ, சட்டங்களும் இயற்றப்பட்டன. கல்விச் செலவு திட்டம் உயர்த்தப்பட்டது. பள்ளிகள் பற்பல ஸ்தாபிக்கப்பட்டன. கண்காணிக்கும் கல்வி இலாகா உத்தியோகஸ்தர்கள் அநேகர் ஏற்படுத்தப்பட்டனர். பிள்ளைகள் நபரும் அதிகரித்தன. ஆனால் கட்டாயக்கல்வி பரவவில்லை. இலவசக் கல்வி பரவவில்லை. ஜில்லா கல்விச் சபைகள் கல்வி விஸ்தரிப்பை, மேற்கொள்ள யோக்கியதையும், ஊக்கமும் இல்லாத தபாலாபீஸ்களாக இருந்துவருகின்றன. விஸ்தரிப்புக்கு முட்டுக்கட்டை ஏற்பட்டுவருகிறது. தேக்கமும் வியர்த்தமும் நிர்வாகம், கண்காணிப்பு, கல்வி புகட்டுவது எல்லாவற்றிலும் ஏற்பட்டு இருக்கின்றன. மான்யங்கள் குறைக்கப்பட்டுவருகின்றன. ஆசிரியர்கள் ஜனசமூகத் தொண்டர்களென்ற நிலைபோய் சமூக அனாதைகளாகப் பாவிக்கப்படுகின்றனர். அங்கீகாரம், மான்யமளிப்பது, கண்காணிப்பது, பள்ளிகள் இருப்பது, எல்லாவற்றிலும் ஊழல்கள் மலிந்து துர்நாற்றம்வீச ஆரம்பித்துவிட்டது. பள்ளிகளுக்குப்போதிய நிரந்தர ஆதாரமில்லை. எனவே கட்டிடம் இல்லை. கல்வித்தேர் அசைய மறுக்கின்றது. கல்வி நிபுணத்வம் அடைந்த ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைகளும் இல்லை; கண்காணிப்பவர்களும் இல்லை; ஆசிரியர்களும் இல்லை. பள்ளிகள் பாழடைந்து வருகின்றன.

5. பள்ளி விவரங்கள்.

1. 142,277 சதுரமைல் உள்ள நமது இராஜதானியில் 46,017,407 ஜனங்கள் உள்ள இடத்தில் 3,094,203 பிள்ளைகளே 51,562 ஆரம்பப்பள்ளிகளில் உளர்.

2. அநேக கிராமங்களில் ஆண் பெண் குழந்தைகளுக்குப் படிக்கப் பள்ளிகள் இல்லை.

3. ஆரம்பப் பள்ளிகள் சர்க்கார், நகர பரிபாலன சபைகள், ஜில்லா போர்டுகள், பஞ்சாயத்து, உதவிபெற்ற நபர்கள், உதவியற்ற நபர்கள் போன்ற பலர் நிர்வாகத்தில் அகப்பட்டு மனம்போன போக்கெல்லாம் நடத்தப்படுகின்றன.

4 ஆண்பிள்ளைகள் பள்ளிகளில் 37 சதவிகிதமும் ஆசிரியர் சர்க்கார் சர்டிபிகேட் பெறாதவர்கள்.

5. சர்க்கார் அங்கீகாரம் பெற்று நடந்துவரும் மூன்றில் ஒரு பங்கு பள்ளிகள் யோக்யதையற்றவை என்று நிர்வாக அதிகாரிகள் பகிரங்கமாகச் சொல்லுகின்றனர்.

6. முதல் வகுப்பில் 100 பிள்ளைகள் சேர்ந்தால் நான்காம் வகுப்பில் 26 நபர்களும் ஐந்தாம் வகுப்பில் 11 நபர்களுமே எட்டிப் பார்க்கிறார்கள். மற்றவர் தேங்கி, மறைகின்றனர்.

6. ஆரம்பக் கல்வி தடைபடும் காரணங்கள்.

முதன்முதலாக ஆரம்பக்கல்வி இலக்ஷியம் வரையறுக்கப்படவில்லை. பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்த வகையில் சில இடங்களில் பற்பல வேண்டாதபள்ளிகளும் சில இடங்களில் ஒரு பள்ளிக்கூடங்கூட இல்லாமலும் திட்டம் ஏற்பட்டிருக்கிறது. நாட்டின் ஏழ்மையால் பெற்றோர் குழந்தைகளுக்கு சம்பளமும் இதர செலவும் செய்ய முடியவில்லை. பள்ளிகள் நடத்தப்படும் முறைகள் விருப்பத்தைப்போக்கி வெறுப்பை உண்டுபண்ணுகின்றன. ஆசிரியர்கள் இந்த தேசத்தில் கூலியாட்களைப்போல் நடத்தப்படுவதால் தொழில் அபிவிருத்தி மனப்பான்மை உடையவராகவும் இல்லை. வருஷம் முழுவதும் புதிது புதிதாக வகுப்புகளில் பெற்றோர்கள் பிள்ளைகளை கிராமங்களில் பள்ளிகளில் சேர்க்கின்றனர். ஆகையினால் வரையறுக்கப்பட்ட வகுப்புகளில் பல திறமை வாய்ந்த குழந்தைகள் தேக்கமுறுகின்றன. பள்ளிப்படிப்பு புள்ளிக்கு உதவாமல் இருப்பதால்,



பெற்றோர்களுக்கும் படிப்பில் ஓர் ருசியில்லை, ஜன சமூகத்திலும் படிப்பு தேச விடுதலைக்கு ஓர் சஞ்சீவி என்பது தெளிவாக இல்லை சர்க்கார் இங்கிலேயில் ஞான ஒளி பரவ ஏற்பாடு செய்யவும் சக்தியற்று இருக்கின்றனர்.

7. சர்க்கார் சமீப முயற்சிகள்.

இங்கிலேயிலிருந்து கல்வித்தேரை அசைக்க, சர்க்கார் பெரும் பாடுபட்டு வருகின்றனர். சாம்பியன் துரையின் திட்டம் சிறிய பள்ளிகளைச் சேர்த்து பெரிய பள்ளிகளாக்கி கல்வியை ஒழுங்குபடுத்த ஏற்பாடுசெய்வது. அத்திட்டம் அநேக பள்ளிகளின் அதிகாரிகளின் எதிர்ப்பால் முறிந்தது. டிசம்பர் 193[illegible]-ல் 5000 ஜனத்தொகை உள்ள இடங்களில் ஆண்களுக்கு கட்டாயக் கல்வியளிக்க ஓர் யாதாஸ்து தயாரிக்க ஓர் கமிட்டியை சர்க்கார் நியமனம் செய்தனர். 1936 ஆகஸ்டு மாதம் எதிர்பார்த்த யாதாஸ்து வெளிவந்தது. தேக்கம், வியர்த்தம், என்ற இரு வியாதிகளைப் பரிகரிக்க பல யோசனைகள் சொல்லப்பட்டன. கட்டாயக் கல்வி முடியாது என்று சொல்லப்பட்டது. குழந்தைகள் சேர்க்கப்பட்ட பின் பள்ளிகளினின்றும் வாபீஸ் பெற்றுக்கொள்ளக்கூடாது என்ற,ஓர் விதக் கட்டாயம் மட்டில் விதிக்க சிபார்சு செய்யப்பட்டது. 1936 டிசம்பரில் மான்ய விதிகள் மாற்றப்பட்டன. கல்வி இலாகா கண்காணிப்பு நபர்கள் அதிகரிக்கப்பட்டுவிட்டனர். ஆசிரியர்களுக்கு ஜீவனும்சம் கொஞ்சம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. திறமையற்ற பள்ளிகள் எடுக்கப்படுகின்றன.

8. புதிய திட்டத்தின் குறைகள்.

நாடு இலவசக் கட்டாயக் கல்வி இலக்ஷியத்தை நாட, சர்க்கார் தேக்கத்தை தடுக்க இலக்ஷியமாகக் கொண்டுவருகின்றனர். ஜனங்களும் ஜனத் தலைவர்களும் கட்டாயமுறை வேண்டுமென்று கேழ்க்கச் சர்க்கார் தாஜாசெய்யும் தத்துவத்தைக் கையாளுகின்றனர். மான்ய விதிகளால் ஆசிரியர்கள் அவர்களுக்கென்று அளிக்கப்படும் மான்ய அளவுகூட சம்பளமாக அளிக்கப்படவில்லை.

மான்ய விதிகள் குறைக்கவும் கூட்டவும் ஏற்பட்டு இருப்பதில் சர்க்கார் கண்காணிப்பவர் அதிகாரம் வலுக்குமே ஒழிய, திறமையுள்ள திறமையற்ற பள்ளிகள் உண்மையிலேயே கண்டுபிடிக்கமாட்டா. புதிய விதிகளின்படி கணக்குகள் தயாரிக்கப்பட்டு மான்யம் வாங்க வசதிகள் இல்லாமல் இல்லை, குழைந்தைகளும், ஆசிரியர்களும், பள்ளிகளும் இருந்த நிலையிலேயே இருக்க சூசிகங்கள் காணப்படுகின்றன.

பாலர் கல்வி)

---


# அகில இந்தியா

## ஆசிரியர்கள் அஷ்யூரன்ஸ் ஸொஸைடி, லிமிடெட்

## சென்னை.

ஆசிரியர்களால், ஆசிரியர்களின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டது.

உங்கள் வயோதிகத்தில் உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் நீங்கள் என்ன சேமித்து வைத்திருக்கிறீர்கள்?

உடனே ஏஜன்ஸி நிபந்தனைகளுக்கும் மற்ற விபரங்களுக்கும் எழுதவும்.

**தலைமை ஆபீஸ்:—**

94/95, புதுத் தெரு, மண்ணடி, ஜி. டி. மதராஸ்.

40 மாத்திரைகள் அடங்கிய



டப்பி 1-க்கு விலை ரூபா 1.

## நவ யௌவனம் வேண்டின்.

உலகப்பிரசித்தி பெற்ற திரேக புஷ்டிக்கும் தாது புஷ்டிக்கும் சிறந்த டானிக்

# மதனமஞ்சரியை

உபயோகியுங்கள்.

இம்மாத்திரைகள் அஜீர்ணம், மலச்சிக்கல் ஞாபகக் குறைவு, நரம்புத் தளர்ச்சி இவைகளை நாசமாக்கி திரேக புஷ்டியும் தாது புஷ்டியும் கொடுத்து இல்லற வாழ்க்கையில் இன்பத்தையும் ஊக்கத்தையும் தரும்.

ஒருமணி நேரத்தில் வாலிபம்

## ரமண விலாசினி

இரவில் ஒரு மாத்திரை படுக்கைக்குச் செல்லும் ஒருமணி நேரத்துக்குமுன் சாப்பிடுவதால் இஷ்டப்படி வீரிய ஸ்தம்பனம் உண்டாகின்றது.



இனும் கேட்லாக். இனும் !!

ஒரு டப்பி விலை ரூ. 1—0—0

மதன மஞ்சரி பார்மஸி.
22, சைனாபஜார் ரோட்,
மதராஸ்.

---

ஒன்று முதல் 5-வது வகுப்புக்களுக்குப் பாடபுத்தகங்களாக வைக்கத் தகுந்தவை

# மணி வாசகம்

நூதன முறையில் ஆரம்ப பாடசாலைகளைப் பார்வையிடும் அனுபவ மிகுந்த ஆசிரியர்களால் தயாரிக்கப் பெற்றவை. பல சித்திரப் படங்கள் கொண்டவை படங்களின் அளவும் தன்மையும் நடையின் நேர்மையும் தெளிவும் இவ்வாசக வரிசையின் பெயருக்கு ஏற்றவாறே அமைந்துள்ளன.

| | அ. | பை. |
|---|---|---|
| முதல் புத்தகம் | 2 | 6 |
| இரண்டாம் புத்தகம் | 3 | 0 |
| மூன்றும் ,, | 4 | 0 |
| நான்காம் ,, | 5 | 0 |
| ஐந்தாம் ,, | 6 | 0 |

## பாலர் கணிதம்

முத்தியாலுபேட்டை
உயர்தர கலாசாலை பிரதம ஆசிரியர்
கே. எஸ். ஸ்ரீனிவாசாச்சாரியார்
B. A., L. T.
இயற்றியது.

முதல் புத்தகம் 3-வது வகுப்புக் குரியது. 6 அணா
இரண்டாம் புத்தகம் 5-வது வகுப்புக் குரியது. 7 அணா
மூன்றும் புத்தகம் 4-வது வகுப்புக் குரியது. 8 அணா

(இப்புத்தகங்களுக்குத் தெலுங்கு பிரதிகளுண்டு.)

இவை அரசாங்க அங்கீகாரம் பெற்றவை.

## ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்,

53-56, பவழக்காரத் தெரு, சென்னை.

... ஆவணக் காப்பக நூலகம்
190347

# Venkatrama & Co.

Printers, Publishers, Book-sellers, Etc.

## வெங்கடராம நீதிகதா வாசகம்

| | | | |
|---|---|---|---|
| இரண்டாம் பாகம் | ... 0—1—6 | நான்காம் பாகம் | ... 0—1—6 |
| மூன்றும் பாகம் | ... 0—1—6 | சித்ரபால சிக்ஷை | ... 0—3—0 |

## வெங்கடராம தமிழ் வாசகம்

| | | | |
|---|---|---|---|
| முதல் வகுப்பு | ... 0—2—0 | நான்காம் வகுப்பு | ... 0—4—0 |
| இரண்டாம் ,, | ... 0—3—0 | ஐந்தாம் ,, | ... 0—4—6 |
| மூன்றும் ,, | ... 0—3—0 | | |

# POETICAL SELECTIONS

(Approved by the Text Book Commitee)

| | | | |
|---|---|---|---|
| FIRST BOOK For I Form | 0—3—0 | THIRD BOOK III Form | 0—4—0 |
| SECOND ,, II ,, | 0—3—0 | VENKATARAM'S 1st Primer | 0—2—0 |

நெ - 4, கார்பொரேஷன் பழக்கடை சைனாபஜார், மதருஸ்.

---

## என். முருகேச முதலியார் அண்ட் ஸன்

டிராயிங், கிராப், கோட்புக், அகௌன்ட் புத்தகம் தயாரிப்பவர்கள்

54-55 பத்ரையன் தெரு ஜி. டி. மதராஸ்.

பாடசாலைக்கு வேண்டிய, கீழ் குறிப்பிட்டபடி 40, 60, 80, 120, பக்கங்கள் கொண்ட, எக்ஸர்ஸைஸ் நோட் புத்தகங்கள், குரோஸ் கணக்கிலும், Students note books (Nos 1, 2, 3, 4, 5 டஜன் கணக்கிலும் விற்கப்படும்.

விலை ஜாபிதா விலாசம் தெரிவிப்பவர்களுக்கு அனுப்பிக்கப்படும்.

6 பவுன் மட்ட பேப்பர்
ரூல் போட்டது & இரட்டை ரூல் ,,

6 பவுன் கல்கத்தா பேப்பர்
ரூல் போட்டது & இரட்டை ரூல்

8 பவுன் கல்கத்தா பேப்பர்
ரூல் போட்டது & இரட்டை ரூல்
ரூல் போடாதது ....
ரூலும் மார்ஜினும் ....
ஒரு பக்கம் ரூல் ....
ரூலும் கலர் அட்டையும் ....
ஒரு பக்கம் ரூலும் கலர் அட்டையும்

9 பவுன் கல்கத்தா பேப்பர்
ரூல் போட்டது
ரூலும் மார்ஜினும் ....

10 பவுன் கல்கத்தா பேப்பர்
ரூல் போட்டது & இரட்டை ரூல்
ரூலும் மார்ஜினும் ....
ஒரு பக்கம் ரூல்ட் ....
ரூலும் கலிகோ அட்டையும் ....
ஒரு பக்கம் ரூலும் மார்ஜினும் கலிகோ அட்டையும்

## STUDENTS' NOTE BOOKS.

8. Pounds Ruled & Methamatics
,, Unruled Margin
,, Unruled
,, Ruled & Margin
,, One Side Ruled

10. Pounds Ruled & Methamatics
,, Unruled
,, One Side Ruled
,, Ruled & Margin

# ஸி. குமாரசாமி நாயுடு & சன்ஸ்

புத்தக வியாபாரிகள்,

சின்னத்தம்பித் தெரு, மதரூஸ்.

---

எலிமென்டரி பாடசாலைகளுக்கு
நவீன முறையில் எழுதிய பலவகைப்
பாட புத்தகங்களும், லைப்ரெரிக்குகந்த
புத்தகங்களும், ஸடேஷனரி வகைகளும்

ஆங்கிலத்திலும் 6" முதல் 9" அங்குல
குறுக்களவு கொண்ட குளோப்புகள்

மனித தேகப்படம்
தமிழ், தெலுங்கு, கன்னடத்திலும்
(செட் 7 வகைப்படங்கள்)

இயற்கை பொருட் படங்களும்
(செட் 47 படங்கள்)

இவ்விடம் கிடைக்கும்.

மதராஸ யூனிவர்ஸிடி, அண்ணமலை
யூனிவர்ஸிடிப் பதிப்புகளுக்கு
ஏஜென்டுகள்.

---

இவர்களது

## காக்ஸ்டன் லிதோ ஒர்க்ஸில்

பல கலர்களில் உயர்தர வேலைப்பாடுடன் வால் போஸ்டர்கள்
அச்சடிக்கப்படும்.



Printed in the Association Press, & Published by P. Veeraraghavan,
94/95 New Street, G. T. Madras.

weightage in the case of pupils in standards 4 and 5. Pupils in standards 6-8 can be given no weightage and each pupil counts as one only.

6. The maximum number of teachers that can be assessed for grant in a school is (a) the number of teachers that can be allowed under rule 1-C (2), or (b) the number of standards or sections in the school or (c) the number of teachers actually employed *whichever* is less. It is suggested that inspecting Officers should should first calculate the total average attendance for the school as specified in rule (2) i. e. giving weightage to pupils of Standards 4 & 5 and excluding underage and stagnating pupils and then divide the number by 20. Then they should count the number of Standards and sections of Standards in the school, counting as only one standard even if a standard is actually divided into sections, if the attendance does not exceed 35 in that standard or if a Deputy Inspector has not permited its bifurcation. Whichever figure is lower should be taken provided of course the number of teachers actually employed is not less.

7. The average attendance for the purpose of rule I-C (1) should be Calculated as an average for the year on the basis of the monthly averages.

8. In regard to rules 1—C (2) and (3) the monthly average—attendance should be taken into account and teachers assessed for grant for each month. The assessment for the year will be the total of such monthly assessments. This procedure may not be necessary in the case of most schools since there will be no great fluctuations in attendance or in the number of teachers employed.

9. In regard to stagnation for the purpose of proviso (ii) of rule 2 If I-C the period of study already put in that standard should be taken into account in the case of pupils who are sent out and readmitted. In regard to pupils who are admitted from other schools they should be included for grant even if in the schools in which they were previously studying they had already remained in the standard for over two years.

10. In regard to rule (6) of 1-C the percentage on the date of Inspection alone should be taken into account but as a special case for the year 1937-38 the the percentage on the 1st October may be taken into account in the case of all schools inspected before that date. When it is observed that the pupils in the higher standards have been admitted only prior to inspection or that their enrolment is only nominal, separate action should be taken under (1) (a) of rule 2 of the rules framed under section 42 (2).

11. The words "if any" in rules (6) (i) of 1 C govern the word "Standard". A school though recognised up to the 4th standard should not be presumed to have the 4 th if such a standard did not exist at any time during 12 months prior to inspection. On the other hand, a school in which standard 5 is recognised should be presumed to have standard 5 even if there are no pupils in that standard at the time of inspection. A school in which standard is recognised should be presumed to have the 4th standard also even if there are no pupils in that standard at the time of inspection.

12. Rule 1-D comes into force on 26-1-37 and schools recognised subsequent to that date should satisfy rule 4-A in regard to the number of trained teachers. This will apply also to schools the recognition and aid applications of which are pending with the District Educational Council. It is permissible for such schools to get recognition but not aid. If aid had been granted contrary to the provisions of rule 4 A after 26-1-37 the matter should be brought to the notice of the District Educational Officer for suitable action.

The rule will apply also to schools which have received temporary recognition and aid if such temporary recognition and aid has not been renewed before 26-1-1937.

13. In regard to Rule (6) of rule 2 the attention of the Inspecting officers is invited to Proceedings C. No. 747 B/37 daded 6th March 1937. For the purpose of proviso (ii) the strength at inspection should be taken into account so far as grants for the year 1936-37 are concerned. As regards proviso (iii) a school which has been recommended a reduction the District Educational Officer or the Inspectress, as the case may be, continues to be an inefficient school even if the District Educational Council assigns an increased grant.

14. The new rule under section 56 (i) and (f) prescribing monthly returns comes into operation on 26-1-37. Managers of aided schools should be informed that the return for February should be submitted by the 15th of March.

15. It is the intention of the Director that inspecting officers should review the monthly returns and point out to managements if they are employing surplus teachers, if it is necessary to bifurcate standards or if the school is likely to become ineligible for aid and to investigate the cause for fall in strength or in attendance.

# "ARAMBA BOTHINI"

A High Class Tamil Monthly

## Good and Health Reading

FOR SCHOOL CHILDREN AND **RURAL** READERS
EDUCATIONAL, INSTRUCTIVE, ENTERTAINING. CHARACTER BUILDING

## TEACHERS & PARENTS.

SHOULD ENCOURAGE READING THIS VERY USEFUL AND HEALTHY MONTHLY.

FREE FROM IMMORAL STORIES & ADVERTISEMENTS AND CINEMA PICTURES.

**ANNUAL SUBSCRIPTION 9 As. 2 COPIES 1 Re.**

***ARAMBABOTHINI OFFICE.*** *DASARPURAM, TINNANUR R.S.*

---

# ஹரிதாசர் கைகண்ட அவிழ்தங்கள்.

**1. 'கக்வா'** கக்குவானுக்கு மிகவும் கைகண்டது; ரிஜிஸ்டர்செய்யப்பட்டது. இந்த வியாதிக்கு உலகத்தில் சகல மருந்துகளிலும் இதுவே மிகவும் மேலானது; உபயோகித்துப் பார்த்தவர்கள் விளப்பரம் செய்கிறார்கள். ... புட்டி ரூ 1.

3 புட்டி வாங்கினல் தபால் சார்ஜ் இனம்.

**2. க்லோரோ சாலினல்** இதுவே ஹரிதாசர் காலரா துளி மருந்து; தவறினதே கிடையாது; அபூர்வமான, மருந்து 30—35 வருஷ அனுபவம். வாந்தி, காலரா, பேதி, வயிற்றுநோய் இவைகள் விரைவில் நீங்கும். புட்டி ரூபா 1 4 0

**3. என்னுத் தைலம்.** ஸ்நானத்திற்கு உபயோகித்தால் சகலவித கண் நோய்களும் நீங்கி சிரசு குளிர்ச்சியாய் கண்களிற்கு ஒளி உண்டாகும். ராஜ உருப்புகளிலுள்ள பேகச்சூடு நீங்கும்.
புட்டி விலை ரூபா 1 4 0



மருந்து காட்லாக் இனம்.

வாத்திமார்களுக்கும் வைத்தியர்களுக்கு மாத்திரம் ரூ 5 மருந்திற்கு குறையாமல் ஆர்டர் அனுப்பினல் ரூ 1 தள்ளி கொடுக்கப்படும்.

ஆஸ்தமா நீரிழிவு முதலிய வியாதிகளுக்கு
கை கண்ட மருந்துகள், விபரம் காட்லாக் இவைகளுக்கு விலாசம்

**Dr. H.** தேவதாசர் B.A., L.T., M.T.Sc.,
தாசர் சித்த வைத்தியசாலை,
தின்னனூர், R.S.